பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 04 வியாழக்கிழமை 19.12.2024 கதிர் 042

## இனிது ரகசியம் அல்ல!

தமிழ் இனமே அழிந்து போனாலும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையை மாவை சோனாதிராசா விட்டு விலகமாட்டார் போலுள்ளது. ஒரு கட்சித் ☞2

# புதிய அரசமைப்பில் சமஷ்டி உள்வாங்கப்படவேண்டும்

## பவள விழாவின் தொடக்க நாளில் தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்து

இலங்கைத் தீவில் சமஷ்டி ஆட்சிமுறை உருவாக்கப்படவேண்டும் என்று 1956 முதல், எந்தவிதசலனமும்இல்லாமல்வடக்கு,கிழக்கு தமிழர்கள் தொடர்ந்து ஜனநாயக முறையில் வலியுறுத்திவருகிறார்கள்.அந்தக்கோரிக்கை புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது உள்வாங்கப்படவேண்டும் என்பதை தமிழ் அரசுக் கட்சியின் அங்குரார்ப்பண நாளான இன்று ஆளும்தரப்புக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம் என்று தெரிவித்தார் அந்தக் கட்சியின் பேச்சாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

கட்சியின் பவளவிழா ஆண்டின் தொடக்க நாளான நேற்று, கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலைஅணிவித்துவணக்கம்செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனை வலியுறுத்தினார்.

யாழ். நகரிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் காலையில் இந்த வணக்க நிகழ்வு இடம்பெற்றது. தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம், கனகசபாபதி, சுமந்திரன் உள்ளிட்ட பலர் இந்த ☞2

## அருச்சுனா எம்.பியின் உரை நேற்று நீக்கம்

நாடாளுமன்றஉறுப்பினர் இராமநாதன் அருச்சுனா யாழ். வைத்தியசாலையில் தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய ஊழியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் முன்வைத்த விசேட கூற்றை சபைப் பதிவேடான 'ஹன்சாட்'டில் இருந்து நீக்கினார் சபாநாயகர்.

சபைக்கு முரணான வகையிலும் நிலையியற்கட்டளைகளுக்குமுரணாகவும் அந்தக்கூற்று இருந்ததால் அதனை ☞2

## நாடாளுமன்றை நேற்றும் கலக்கிய 'கலாநிதி'ப் பட்டம்

நாடாளுமன்றத்தில் 'கலாநிதி' பட்டத்தால் நேற்றும் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

இல்லாத கலாநிதி பட்டத்தை பயன்படுத்தியவர்கள் உண்மை வெளிப்படும் என்ற அச்சத்தில் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துவிட்டு சுயவிவரக் கோவையில் இருந்துகலாநிதிபட்டத்தைநீக்கியுள்ளார்கள். இவர்களின் செயற்பாடு வெட்ககேடானது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா கடுமையாக சாடியதைத் தொடர்ந்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகள் குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்த கருத்துக்களே இந்த மோதலுக்கு ☞8



## எலிக் காய்ச்சல் நோய் தொடர்ந்து அதிகரிப்பு

யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. நேற்றுவரை 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்தியர்ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நோய் தொடர்ந்து பரவுவதைத் தடுப்பதற்காக 7200 ☞2

### கொவிட் காலத்தில்

## பி.சி.ஆர், அன்டிஜன் கொள்வனவில் பெரு மோசடி என்கிறது ஆளும்தரப்பு

கொவிட் தொற்று காலப்பகுதியான 2019 முதல் 2022 காலப்பகுதியில் அன்டிஜன் மற்றும் பீசீஆர் சோதனைகளுக்கான மருத்து வசதிகளைக் கொள்வனவு செய்வதில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது. அத்துடன் அதிக அன்டிஜன் கொள்வனவு செய்த நிறுவனம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாத நறுவனமாகும். இவை தொடர்பில் அமைச்சரவை மட்டத்தில் விசாரணை மேற்கொண்டு மோசடிக்காரர்களை வெளிப்படுத்துவோம் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்ட கேள்வியொன்றுக்குப் ☞8

## கார்களின் இறக்குமதிக்கு பெப்ரவரி முதல் அனுமதி

தனிப்பட்ட பாவனைக்கான கார்களை இறக்குமதி செய்வதற்கு பெப்ரவரி முதலாம் திகதி முதல் அனுமதி வழங்க முன்மொழியப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அனுர திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

'இதனால் மீண்டும் டொலர் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என்பதில் சந்தேகம் வேண்டாம், மத்திய வங்கியுடன் நீண்ட நாட்களாக விவாதித்து, வெளியேறும் டொலர்களின் அளவைப் புரிந்துகொண்டே இதைச் செய்கிறோம். அதனால்தான் நாங்கள் உழைத்தோம். வாகனச் சந்தையை கடுமையான உறுதிப்பாட்டுடன் திறக்க ☞2

## கட்டுப்பாட்டு விலையில் அரிசி எங்குமே இல்லை

### எதிர்க் கட்சி குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு விதித்துள்ள கட்டுப்பாட்டு விலையில் அரிசியை எங்கும் கொள்வனவு செய்ய முடியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் (சஜபா) தெரிவித்தார். ☞8

## வட்டுவாகல் பாலம் அமைக்க அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீடு

முல்லைத்திவு மாவட்டத்தின் மிக முக்கிய பாலமான வட்டுவாகல் பாலத்தை நிர்மானிப்பதற்கு அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் கேள்வி ஒன்றுக்குப்பதிலளித்தபோது அமைச்சர் இனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவைச் சந்தித்த தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற ☞8

### போலி என நிரூபித்தால் அரசியலைவிட்டு ஒதுங்குவார் என

## கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து நாடாளுமன்றில் சஜித் நேற்று சவால்

நான் கல்வி கற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அனைத்து சான்றிதழ்களையும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்களாக சகல குடிமகனாலும் பரிசீலித்துப் பார்க்க முடியும்.

நான் போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தது நிரூபிக்கப்பட்டால், எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பவற்றில் இருந்து மட்டுமல்ல அரசியலில் இருந்தும் விலகுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். பாலர் பாடசாலை முதல் பட்டப்படிப்பு வரை தான் பெற்றுக்கொண்ட கல்விச் சான்றிதழ்களை சபையில் சமர்ப்பித்த அவர், அவை போலி என்று நிரூபித்தால் அனைத்துப் பதவிகளையும்துறந்துஅரசியலில் இருந்தே விலகுவேன் ☞8

## ஜனாதிபதி அடுத்தமாதம் சீனாவுக்குப் பறக்கிறார்

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அடுத்த மாதம் சீனாவுக்குச்செல்வுள்ளார்என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜிதஹேரத்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மூன்று நாள் பயணமாகஇந்தியாசென்றிருந்த நிலையில் அவருடன் அயலுறவுத்துறை அமைச்சரும் சென்றிருந்தார். அங்குவைத்து அவர் ஜனாதிபதியின் சீனப் பயணம் பற்றித் தெரிவித்தார் என 'தி ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் புதிய ஆளும்தரப்பு 'இருதரப்பு-கூட்டுவெற்றி' என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து நாடுகளுடன் உறவுகளை பேணுகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டில்லியில் உள்ள இந்தியன் பவுண்டேசனில் ஒழுங்கப்பட்ட நிகழ்வென்றில் பங்கேற்று உரையாற்றிய அயலுறவுத்துறை ☞8

## இலசவச படகுச் சேவைக்கு நிதி ஒதுக்கித்தர முடியாமா?

### சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படும் படகுச் சேவைக்கு கட்டணம் அறவிடப்படுகிறது. வறுமை நிலையில் உள்ளவர்கள்தான் இந்தச் ☞2

# ஓ.எல். பரீட்சை திகதி அறிவிப்பு

கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண தர 2024 (2025) பரீட்சை அடுத்த வருடம் மார்ச் 17ஆம் திகதி முதல் மார்ச் 26ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்றுப் பிற்பகல் தெரிவித்தார்.

பரீட்சைதொடர்பானமேலதிகதகவல்களை 1911 (நேரடித் தொலைபேசி), 0112784208, 0112784537 மற்றும் 0112786616, தொலைநகல் இலக்கம் 0112784422 அல்லது gceolexamsl@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்

இல்லையெனில், 0112786200, 0112784201 மற்றும் 0112785202 பொதுத் தொலைபேசிகள் அல்லது அவற்றின் நீட்டிப்புகளான 263, 265, 280, 282 மற்றும் 443 ஆகிய இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இனி இது .....

தலைவர் எப்படி இருக்கக்கூடாதோ அதற்கெல்லாம்உதாரணமாகிவிட்டபின்னரும் வவுனியாவில் நடந்த கடைசி மத்திய குழுக் கூட்டத்திலும் தானே தலைவராகத் தொடரவேண்டும் என்று விடாப்பிடியாக நின்றார் மாவை. ஆனால் மத்திய குழு அதனை ஏற்கவில்லை. டிசெம்பர் 28 மாவை கட்சியின் தலைவராகத் தொடரலாமா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. டிசெம்பர் 14 நடந்த கூட்டத்திலேயே அந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய குழுவில் மாவையர் தலைவராகத் தொடர்வதற்கு ஏதுவாகப் பெரும்பான்மை கிடையாது. அவருக்கு ஆதரவாக சிறீதரன், சிறீநேசன், சிவமோகன், யோகேஸ்வரன்என்று மிகச் சிலரே இருக்கின்றனர். மாவையின் தலைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதும் தள்ளாத வயதில் வந்திருந்து தான் கட்சித் தலைவராகஇருப்பதற்காகமன்றாடும்அவரை நேரில் பார்த்து அவரது மன்றாட்டைத்தைப் பார்த்து கடைசியில் வழிவிரக்கம் கொண்டு அவருக்குஆதரவளிக்கமுன்வருபவர்களையும் சேர்த்துக்கொண்டால்கூட மத்திய குழுவில் மாவைக்கு ஆதரவு கிடைக்காது.

டிசெம்பர் 28 வாக்கெடுப்பில் எப்படியும் அவர் தோல்வி அடைவார் என்பது நிச்சயம். இந்த நிலையில் அவரது தலைமையைத் தக்க வைக்கும் முயற்சியாக, மாவையர் தனது கட்சித் தலைமைப் பதவியை விட்டு விலகுகிறார் என்று தெரிவித்து எழுதிய கடிதத்தின்அடிப்படையில்கட்சியின்செயலாளர் நடவடிக்கை எடுப்பதற்குத் தடை விதிக்கும்படி கேட்டு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தின்அடிப்படையில்டிசெம்பர் 28 கட்சியின் மத்திய குழுவில் வாக்களிப்பு இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்தும்படியும் மாவை சேனாதிராசா கட்சித் தலைவராகத் தொடர்வதை உறுதிப்படுத்தும்படியும் மனுதாரர் தனது மனுவில் கேட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வழக்குத் தொடர்பில் மாவை நேரடியாகவே சட்டத்தரணிகளோடுஆலோசனைநடத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குகிற சமயத்தில்அதில்போட்டியிடுவதற்குத்தனக்கும் தான் பரிந்துரைத்தவர்களுக்கும் தேர்தல் குழு வாய்ப்புத் தர மறுத்ததைத் தொடர்ந்து கட்சியின் அடிப்படை உறுப்பினர் என்ற நிலையதத் தவிர அனைத்துப் பதவிகளில் இருந்தும் தான் விலகுகிறார் என்று மாவை சோனதிராசா நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதன் பிரதி ஒன்றை கட்சியின் செயலாளருக்கு சிறீதரன் அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கடிதம் தொடர்பில் விளக்கமளிக்குமாறு செயலாளர் அனுப்பிய கடிதங்களுக்கு எந்தப் பதிலையும் வழங்காத மாவை, அவரது பதவி விலகல் கடிதத்தின் அடிப்படையில்தான்மேலதிகநடவடிக்கைகளை எடுக்கிறார் என்று செயலாளர் அறிவித்த பின்னர், அந்தக் கடிதத்திற்கு முன்னைய திகதியிட்டு தனது பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெறுகிறார் என்று மீண்டும் சிறீதரனுக்கு கடிதம் எழுதினார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அவரது பதவி விலகல் கடிதத்தை திரும்பப் பெறும் கடிதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த கட்சியின் மத்திய செயற்குழுஅவர்பதவியில்நீடிப்பதுதொடர்பாக டிசெமபர் 28 வாக்கெடுப்பு நடத்துவது என்று தீர்மானித்தது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் கலந்துகொண்டனர். தந்தையின் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்தும் மலர்கள் தூவியும் வணக்கம் தெரிவித்தனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த75வருடங்களாகதமிழ்மக்களுடைய கட்சியாகவியாபித்துஇருக்கின்றஎங்களுடைய தமிழ் அரசுக் கட்சியின் சார்பில், அதன் பவள விழா தாடக்க நாளில் புதிய ஆளும்தரப்புக்கு ஒரு செய்தியைச் சொல்லுகின்றோம்.

சர்வதேசத்தினால், சர்வதேச சட்டங்களினால், ஒரு மக்கள் கூட்டமாக கருதப்படுகின்ற எங்கள் இனத்தினுடைய ஜனநாயகத் தீர்ப்புக்கு மதிப்பு அளிக்கப்படவேண்டும் என்ற செய்தியை இந்த ஆளும்தரப்பிடம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

நீங்கள் ஆட்சிக்கு வருகின்ற போது புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். அதனை நிறைவேற்றுங்கள்என்றுவலியுறுத்துகிறோம்.

இலங்கைத் தீவில் சமஷ்டி உருவாக்கப்படவேண்டும் என்று எந்தவித சலனமும் இல்லாமல் 1956 முதல் வடக்கு, கிழக்கு தமிழர்கள் தொடர்ந்து ஜனநாயக முறையில் வலியுறுத்தி வரும் கோரிக்கை அந்த அரசமைப்பு உருவாக்கத்தின்போது உள்வாங்கப்படவேண்டும் என்பதை தமிழ் அரசுக் கட்சியின் அங்குரார்ப்பண நாளில் அரசுக்குக் கூறி வைக்க விரும்புகின்றோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இந்தியாவுக்குச்சென்றிருந்தசமயம்இந்தியப் பிரதமரோடு சேர்ந்து கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை தமிழ் மக்கள் தொடர்பாக மூன்று விடயங்களைத் தெரிவித்திருக்கிறார்.

முதலாவது-இலங்கையின்அரசமைப்பை முற்றுமுழுத்தாகநடைமுறைப்படுத்தவேண்டும் என்பது. காலா காலமாக இந்திய அறிக்கைகளில் பதிமூன்றாவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயம் சொல்லப்படுவது வழமை. 13ஆவது திருத்தம் இலங்கை அரசமைப்பின் ஒரு பின்னிணைப்பு அல்ல, அது அரசமைப்பின் ஒருபகுதிஎன்பதைநாங்கள்திரும்பத்திரும்பச் சுட்டிக்காட்டி வருகின்றோம். ஆகையினால் இலங்கையின் அரசமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் குறிப்பிடுவது 13ஆவது திருத்தம் மற்றும் தமிழ்மொழியின் நடைமுறையாக்கம் தொடர்பான 16 ஆவது திருத்தம் ஆகியவற்றையும் சேர்த்துத்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதில் குறிப்பிட்டபடி காணி, பொலிஸ் அதிகாரங்கள் - அவை முழுமையாக வழங்கப்பட்டிருக்கின்றனவோ இல்லையோ - குறிப்பிட்டபடி வழங்கப்படவேண்டும் என்பதுதான் இந்தியப் பிரதமரின் கருத்து.

இரண்டாவதாக அவர் கூறியிருப்பது இலங்கைதமிழ்மக்களுடையஅபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பது. தமிழ் மக்களுடைய அபிலாசை என்ன என்பதை 1956 முதல் தெட்டத் தெளிவாக தமிழ் மக்கள் முன்னிறுத்தி வருகிறார்கள். சமஷ்டி முறைத் தீர்வுதான் அது, அதற்குக் குறைவானது எதுவும் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆகவே, தமிழ் மக்களின் அந்த அரசியல் அபிலாஷை நிறைவேற்றப்படவேண்டும் என்பது பாரதப் பிரதமரின் கோரிக்கை.

மூன்றாவது விடயம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும். மாகாணசபைத்தேர்தல்நடத்தப்படவேண்டும் என்பதாகும். ஆகவே, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டுஒருகூட்டுப்பத்திரிகையாளர் மாநாட்டில்இவற்றைஇந்தியப்பிரதமர்நரேந்திர மோடி வலியுறுத்தி இருக்கின்றமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதற்காகப்பாரதப்பிரதமருக்குநன்றிகூறும் அதேவேளை,இலங்கை-இந்தியஒப்பந்தத்தின் கீழ் இவ்விடயங்களில் இந்தியாவுக்கு இருக்கக்கூடிய கடப்பாடுகளையும் நாம் நினைவு கூற விரும்புகின்றோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கின்ற அதேவேளை அவற்றை நிறைவேற்றப்பண்ணுகின்றஎல்லாவிதமான இராஜதந்திர நகர்வுகளையும் இந்திய அரசு தொடர்ச்சியாக மேற்கொள்ளும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## இலசவச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையைப் பயன்படுத்துகிறார்கள். எனவெ இந்தப் படகுச் சேவையை இலவசமாக முன்னெடுப்பதற்கு மாகாண சபைக்கு கொழும்பு அரசினால் நிதி ஒதுக்க முடியுமா என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சரிடம் அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திராவிடம் இதற்கான யோசனையை முன்வையுங்கள் என்று தெரிவித்தார்.

உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு நடவடிக்கைஎடுக்கலாம்என்றும்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்களின் நேரத்தில் உரையாற்றியநெடுஞ்சாலைகள்அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்சாணக்கியனின்கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை மற்றும் எழுவான்கரை பிரதேசங்களை இணைக்கும் பிரதான பாலமான மண்டூர் – குருமன்வெளி பாலம் நிர்மாணிப்பு மற்றும் மண்முனை தென்மேற்கு, மண்முனை தெற்கு எருவில்பற்று ஆகிய பிரதேசங்களை இணைக்கும்அம்பிளாந்துறைகுருக்கள்மடம் பாலம் நிர்மாணிப்பு தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்வைத்துள்ள கேள்விகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விடயதானங்களுக்கு உட்பட்டதல்ல,கிழக்குமாகாணவீதிஅபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வருபவை அவை.

இருந்தாலும் சாணக்கியன் மக்களின் பிரச்சினைகள் பற்றி கேள்வியெழுப்பியுள்ளார் என்பதால் விடயதானத்துக்கு அப்பாலும் பதிலளிக்க விரும்புகிறேன்.

மண்டூர் - குருமன்வெளி பாலத்தை நிர்மாணிப்பதற்குஆரம்பக்கட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளநிலையில்போக்குவரத்துக்காக படகுச்சேவை முன்னெடுக்கப்படுகிறது. பாலத்தை நிர்மாணிப்பதற்கு 9 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அம்பிளாந்துறை - குருக்கள்மடம் பாலத்தை 900 மீற்றர் நீளம் கொண்டதாக நிர்மாணிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு 10 பில்லியன் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தஇரண்டுபாடங்களும்வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின்கீழ்வராது. அவைமாகாண சபைகளின் கீழேயே இருக்கின்றன.

கோறளைப்பற்று - தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திகிலிவெட்டை - சந்திவெளி பாலம் மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புன்னக்குடா - களுவன்கேணி பாலம் ஆகியவை 250 மீற்றர் தூரத்தை உடையன. இந்தப் பாலங்களை நிர்மாணிப்பதற்கு 2 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு ஜய்க்கா நிறுவனம் மட்டக்களப்பு பகுதியில் களப்பு ஊடாக பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு கருத்திட்ட யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. இந்த வரைபில் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்துப் பகுதிகளும்உள்ளடக்கப்பட்டுள்ளன-என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய சாணக்கியன், அமைச்சர் குறிப்பிடுவதை போன்று இது மாகாண சபைக்கு உட்பட்ட விடயதானமாயின் ஒருபோதும் மட்டக்களப்பில் பாலங்களில் நிர்மாணிக்கப்படமாட்டாது.

கொழும்பு அரசு மாகாண சபைகளுக்கு வழங்கும் நிதி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குக்கூட போதாது. இதன் காரணமாகவே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைக் கோருகிறோம்.

ஜனாதிபதியை அண்மையில் சந்தித்தபோதும் இந்த விடயம் பற்றிப் பேசினோம். பாலம் நிர்மாணிப்பு விடயதானத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கினால் இந்த ஆளும்தரப்பின் பதவி காலத்துக்குள் ஏதேனும் முன்னேற்றகரமாக நடக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்றார்.

இதற்குப் பதிலளித்த, முதல்வர் பிமல் ரத்நாயக்க ஜனாதிபதியிடம் இடம்பெற்ற சந்திப்பின்போது இவ்விடயம் பற்றிப் பேசப்பட்டதை ஏற்றுக்கொண்டார்.

மீண்டும் எழுந்த, சாணக்கியன், பாலம் நிர்மாணிக்கும் வரை இப்பகுதியில் படகுச்சேவை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால், கட்டணம் அறவிடப்படுகிறது. வறுமை நிலையில் உள்ளவர்கள்தான் படகுச் சேவையைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே அதனை இலவசமாக முன்னெடுப்பதற்கு கொழும்புஅரசின்ஊடாகமாகாணசபைக்குநிதி ஒதுக்க முடியுமா, என்று கேள்வியெழுப்பினார்.

## எலிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருக்கு இதுவரை தடுப்பு மருந்துகள் வழங்கப்படுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 28 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 8 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில்6நோயாளர்களும் யாழ் போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். இதே காலப்பகுதியில் இறப்பு பதிவாகவில்லை.

இதுவரை இந்நோய் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

நேற்றுவரை ஏறத்தாழ 7200 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காகசுகாதாரப்பணியாளர்கள் வீடுவீடாகச்சென்றுஆய்வுகளைமேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இக்கிருமித்தொற்றுஉள்ளதாஎன்பதைஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ் மாவட்டத்திற்கு இன்று (நேற்று) வருகை தந்துள்ளது. இக்குழு பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குச் சென்று கால்நடைகளை ஆய்வு செய்து குருதி மாதிரிகளைஎடுத்துச்செல்லவுள்ளதுஎன்கிறார்.

## கார்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை நீக்கும் அறிவிப்பை நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு நேற்று வெளியிட்டது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## அருச்சுனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கும்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுசபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா வேளையின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அருச்சுனா யாழ்ப்பாணம் வைத்தியசாலை தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மின்சாரம் தாக்கி யாழில் பசு சாவு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி தட்டாதெரு சந்தியில் பாதசாரி கடவைக்கு அருகே மின்சாரம் தாக்கி பசு ஒன்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது -யாழின் பிரதான பகுதியிலுள்ள மின்விளக்கினைசுற்றி கொடிவகை தாவரம் ஒன்று படர்ந்து மின்சார கம்பிகளிலும் சுற்றிப்பரவி உள்ளது.

இதனைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எவரும் கவனிக்காதுவிட்டிருந்தநிலையில் செவ்வாய்க்கிழமை மின்ஒழுக்கினூடாக கொடி முழுவதும் மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதன்போது எதேர்ச்சியாக குறித்த கொடியை உணவாக உட்கொள்ள விளைந்த பசு மீது மின்சாரம் தாக்கியுள்ளது.

இதனை அவதானித்த குறித்த வீதியால்பயணித்தவர்கள்மற்றும் அருகில் இருந்த கால்நடை மருத்துவர்கள் எனபலரும் குறித்த பசுவை காப்பாற்ற முற்பட்டனர்.

பசுவின் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்தமையாலும் வீதியில் மழைநீர் தேங்கி நின்றமையாலும் பசுவை காக்க முனைந்தவர்கள் மீதும் மின்சாரம் தாக்கியுள்ளது.



எனவே அவர்கள் பசுவைக் காக்கும் முயற்சியில் இருந்து பின்வாங்க நேரிட்டது.

இது தினமும் பலரும் பயன் படுத்தும் பாதை என்பதால் பசுவின் நிலை எவருக்கும் ஏற்பட்டிருக்கக் கூடும் எனவும் பெறுமதிமிக்க பசுவின் உயிர்பறிக்கப்பட்டமைக்கு உரிய அதிகாரிகள் பொறுப்பு கூற வேண்டும் எனவும் தெரிவித்து பொதுமக்களும் அவ்வீதியால்பயணித்தவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகைதந்த மின்சார சபையினர் மின்னை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டர் கள் மேலும் தெரிவிக்கையில் -

குறித்த பகுதியில் மின்சார அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இதற்கு மின்சாரசபையினர் தாம் பொறுப்பல்ல வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் யாழ்.மாநகர சபையே இதற்கு பொறுப்பு.

தாம் துரித சேவை இலக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் எனவும் எனவே தம்மால் ஒரே பகுதியில் அதிக நேரம் தரித்திருக்க முடியாது எனவும் தெரிவித்த மின்சாரசபை அதிகாரிகள் அவ்விடத்தில் இருந்து விலகினர்.

எந்த அதிகாரிகளும் குறித்த சம்பவத்திற்கு பொறுப்பேற்காத நிலையில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள குறித்த பசுவின் உரிமையாளர் தீர்மானித்தார்.

அசம்பாவிதங்கள் நடந்த பிறகு நடவடிக்கைகள் எடுக்காது இவ்வாறான சம்பவங்கள் இனிமேல்இடம்பெறாதவகையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கின்றோம் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.







# இமாலயப் பிரகடனத்தினை முன்னெடுக்கும் பணிக்காக மக்கள் இயக்கம் உருவாக்குக

## பலதரப்பட்ட பங்கேற்பாளர்களும் வலியுறுத்தல்

இமாலயப் பிரகடனத்தைத் தொடர்ந்தும் தேசிய உரையாடலாக முன்னெடுத்துச்செல்வதற்கான பணியை மக்கள் இயக்கமொன்றை உடனடியாக உருவாக்கி ஒப்படையுங்கள் என்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட மட்டத்திலான உரையாடல்களில் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணகத்தை நோக்கிய இமாலயப் பிரகடனம் பற்றிய உரையால் கடந்த 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்தது.

இதன்போது பௌத்த, இந்து, காத்தோலிக்க, இஸ்லாமிய சமயத்தலைவர்கள் மற்றும் பல்லினசிவில் அமைப்பின் பிரதிநிதிகள், இளையோர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வின் போது, இமாலயப் பிரகடனம் தேசியமட்டத்தில் உரையாடப் பட வேண்டிய தக்க தருணம் ஏற்பட்டுள்ளது. ஆகவே தேசிய கலந்துரையாடலொன்றை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்பதை பங்கேற்பாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

அத்துடன், இமாலயப்பிரகடனத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அளப்பரிய பணியை பௌத்த அமைப்புக்கள், உலகத் தமிழர் பேரவை உட்பட வரையறுக்கப்பட்ட சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றுக்குள் மட்டுப்படுத்தக்கூடாது என்றும் பங்கேற்பாளர்கள் கேட்டுக் கொண்டனர்.

மேலும், இமாலயப்பிரகடனத்தினை தேசிய மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கான மக்கள் இயக்கமொன்றை உடன் உருவாக்குவதோடு தேசிய உரையடலை முன்னெடுத்துச் செல்லும் பணியை அந்த மக்கள் இயக்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பங்கேற்பாளர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி கோரியுள்ளனமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் நடைபாதை அமைக்கும் பணி தீவிரம்

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணி நகரசபையால்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பாதையில் இருபக்கமும்வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுகாதாரமற்ற வகையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இதனால் அந்த பாதையில் வாகனநெரிசலும் ஏற்பட்டுள்ளது.

இதனைகருத்தில்கொண்ட வவுனியா நகரசபை அந்தவீதியின்முகப்புபகுதியில் நடைபாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, நேற்று (புதன்கிழமை) அங்கு மரக்கறி விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் பொலிஸாரால் அகற்றப்பட்டனர். 100



# கொழும்பிலிருந்து வந்த பஸ் மிருசுவிலில் விபத்து

## 5 பேர் காயம்

கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிச்சென்ற அதிசொகுசு பஸ் ஒன்று, சிறிய ரக உழவு இயந்திரத்துடன் மோதி விபத்திற்குள்ளானதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (புதன்கிழமை) காலை ஏ-9 வீதி, மிருசுவில் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# செயலில் காட்டுங்கள்

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றி இரண்டு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. அறுதிப் பெரும்பான்மையோடு நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி ஆட்சியை அமைத்து ஒரு மாத காலத்தை எட்டிவிட்டது. இருப்பினும் இன்னும் எதிர்க் கட்சி மனநிலையிலிருந்து அது நகரவில்லையோ என்று தோன்றுகின்றது.

ஆளும்தரப்பு அமைச்சர்கள், எதிர்க் கட்சி மனநிலையில் இருந்தபடி முன்னைய ஆட்சியாளர்கள் மீது தொடர்ந்து குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னரும் அவர்கள் இப்படியான குற்றச்சாட்டுக்களை ஆளும்தரப்பினர் மீது அடுக்கிக்கொண்டே இருந்தனர். இப்போதும் அதுபோன்றே குற்றச்சாட்டுக்களை அடுக்கின்றனர்.

அடுக்குவதில் பிரச்சினையில்லை, அவைபற்றிய விசாரணைகளை முன்னெடுத்து உண்மைகளைக் கண்டறிந்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டிய இடத்தில் இன்று இருக்கும் தேசிய மக்கள் சக்தியினர் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையே ஒரு தவமாகச் செய்வது பொருத்தமானது அல்ல. அதுமட்டுமன்றி தாம் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் மீது சரியான, பொருத்தமான, நீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர்கள் தவறுவதை இந்த ஒரு மாத காலத்திற்குள்ளேயே காணமுடிகின்றது.

அதற்குச் சிறப்பான உதாரணம் சாராயக் கடைகளுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைத்தார்கள் என்பது. அரசுத் தலைவர் தேர்தலை இலக்காக வைத்து முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் அரசியல் இலஞ்சமாக இந்த சராயக் கடை அனுமதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன என்று தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னர் குற்றஞ்சாட்டினர்.

அதிகாரத்திற்கு வந்த பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் 361 சாராயக் கடை அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தனர். ஆனால், ஒரு மாதம் கடந்தும் அந்த அனுமதிகளுக்குப் பரிந்துரை செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்கிற விவரங்கள் எவற்றையும் அவர்கள் வெளியிடவில்லை.

இந்த நிலையில்தான் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, கொவிட் –19 பெருந்தொற்றுக் காலத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்களுக்கானது மற்றும் சிகிச்சைக்கான அன்டிஜன் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதில் பெரும்மோசடி இடம்பெற்றுள்ளது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

"2019 முதல் 2022 வரை இலங்கையில் கொவிட் 19 தொற்றுப் பரிசோதனைகளின்போது, அன்டிஜன் பரிசோதனை அரச துறைகளின் மூலம் 21 இலட்சத்து 97 ஆயிரத்து 318 பரிசோதனைகளும் தனியார் துறைகளின் மூலம் 6 இலட்சத்து 18 ஆயிரத்து 538 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பீ.சீஆர். அரச துறைகளின் மூலம் 40 இலட்சத்து 41 ஆயிரத்து 124 பரிசோதனைகளும் தனியார் துறை மூலம் 26 இலட்சத்து 41 ஆயிரத்து 326 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்டிஜன் மற்றும் பீசீஆர். தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு 26 நிறுவனங்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அதில் 7 நிறுவனங்களில் இருந்தே அன்டிஜன் மற்றும் பீசீஆர். தொகுதிகளை ஆப்போதைய ஆளும்தரப்பு கொள்வனவு செய்திருக்கிறது. அதில் 2,2 பில்லியன் ரூபாய்க்கு அதிக அன்டிஜன் தொகுதிகளைக் கொள்வனவு செய்துள்ள கொழும்பு நிறுவனம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்படாத நிறுவனமாகும்.

அதேபோன்று உலக சந்தை விலையைவிட அதிக விலைக்கு தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும். விசாரணையின் பின்னர் மோசடிக்காரர்கள் தொடர்பில் இந்தச் சபைக்கு வெளிப்படுத்துவேன்" – என்றார் அவர்.

எதிர்க் கட்சி மனநிலையில் இருந்து இப்படிக் குற்றச்சாட்டுக்களைத் தெரிவிப்பதை விடுத்து, மோசடிகளில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவும் அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவும் ஆளும் தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காகத்தான் மக்கள் தமக்கு வாக்களித்துள்ளார்கள் என்பதை ஆளும் தரப்பினர் நன்கறியவேண்டும். எதிர்க் கட்சியாக இருந்தபோது இத்தகைய குற்றங்களுக்குக் கடும் தண்டனைகளைப் பெற்றுக்கொடுப்போம் என்று சொன்னதை நம்பித்தான் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். ஆட்சியைப் பிடித்த பின்னரும் குற்றச்சாட்டுக்களை மட்டுமே சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. செயலில் காட்டவேண்டும்.

# சாய் வாலா மோடியும் ரொபி வாலா அநுரவும்

**உபுல் யோசப் பெர்னாண்டோ**

நேபாளப் பிரதமராகப் புதியவர் ஒருவர் பதவியேற்றால் தனது முதலாவது பயணமாக இந்தியாவுக்குச் செல்வதுதான் பாரம்பரிய முறையாகும். இருப்பினும், சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நேபாளப் பிரதமர் இந்த பாரம்பரியத்தை உடைத்தார். தனது முதல் பயணத்தை அவர் சீனாவிற்கு மேற்கொண்டார்.

நோபாளத்தில் மட்டுமல்ல மாலத்தீவிலும் புதிய பிரதமர் ஒருவர் இந்தியாவிற்கே முதல் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளும் பாரம்பரியம் உண்டு. ஆனால் அவர்களின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி இந்தப் பாரம்பரியத்தை உடைத்து சீனாவிற்கு



தனது முதல் பயணத்தை மேற்கொண்டார்.

அதேபோன்று இலங்கையின் அரசுத் தலைவர்களும் பதவியேற்றதும் தமது முதலாவது பயணத்தை இந்தியாவிற்கு மேற்கொள்வதே பாரம்பரியம். ஆனால், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கும் அவரது கட்சிக்கும் உள்ள வரலாற்று நெருக்கம் காரணமாக அவர் தனது முதல் பயணத்தை சீனாவிற்கு மேற்கொள்வார் என்றே பலரும் கருதினர். பூகோள அரசியலுக்குள் மாட்டிக்கொள்ளாமல் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை சீனா அல்லது இந்தியா இரண்டையும் தவிர்த்து வேறு ஒரு நாட்டுக்கு மேற்கொள்வார் என்று வேறு சிலர் எதிர்பார்த்தனர்.

மத்திய கிழக்குப் பகுதியே அவரது முதல் இலக்காக இருக்கும் என்று வதந்திகூடப் பரவியது, ஆனால் அனுரா அந்த வதந்திகள் அனைத்தையும் தவறு என்று நிரூபித்து தனது முதல் வெளிநாட்டுப் பயணத்திற்காக இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார். இது இந்திய பிரதமர் மோடிக்கு கிடைத்த வெற்றி.

மோடி அளவுக்கு இலங்கை தலைவர்களை டீல் செய்த இந்திய தலைவர் வேறு யாரும் இல்லை. அதனால்தான் மோடியால் இலங்கைத் தலைவர்களை நன்றாகப் படிக்க முடிகிறது. அவர் சந்தித்த முதல் இலங்கைத் தலைவர் மகிந்த ராஜபக்சே. மோடியுடனான தனது முதல் சந்திப்பிலேயே இலங்கையில் இந்திய திட்டங்களை விரைவுபடுத்துவதாக மஹிந்த உறுதியளித்தார். ஆனால் சீனத் திட்டங்களையே மஹிந்த துரிதப்படுத்தினார். மகிந்த நாட்டை சீனாவுக்கு விற்றுவிடுவார் என இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அதற்குள் இந்தியாவை எச்சரித்திருந்தார்.

2015இல் மைத்திரி ஜனாதிபதியாகவும் ரணில் பிரதமராகவும் பதவியேற்றனர். மோடியை சந்திப்பதற்காக மைத்திரி முதலில் இந்தியா சென்றார். இந்தியத் திட்டங்களை விரைவுபடுத்துங்கள் என்று மைத்திரியிடம் மோடி கூறினார். அதன் பின்னர் ரணிலை சந்தித்தார் மோடி. இந்திய திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு மைத்திரி தடையாக இருக்கிறார் என்று மோடியிடம் ரணில் தெரிவித்தார். இறுதியாக மைத்திரியும் ரணிலும் கைகோர்த்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்குக் கொடுத்தனர். உறுதியளித்தபடி இந்திய திட்டங்கள் விரைவுபடுத்தப்படவில்லை.

கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்றபோது இந்தியாவிற்குப் பயணம் செய்து, இந்தியத் திட்டங்களை துரிதப்படுத்துவார் என்றும், கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்வார் எனவும் உறுதியளித்தார். பின்னர் அந்த வாக்குறுதியை மீறினார்.

ராஜபக்சே குடும்பம் இலங்கையை சீனாவுக்கு விற்கும் என இந்தியாவை எச்சரித்த ரணில், ராஜபக்சே குடும்பத்துடன் கைகோர்த்து அதிபராகி, மோடியை சந்திக்க இந்தியா வந்தார். இந்திய திட்டங்களை விரைவுபடுத்துவார் என்று மீண்டும் உறுதியளித்தார். இலங்கையின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனுரகுமாரவையும் மோடி சமீபத்தில் சந்தித்துப் பேசியிருக்கிறார். அவரும் இந்திய திட்டங்களை விரைவுபடுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

மோடிக்கும் அனுராவுக்கும் ஒற்றுமைகள் உள்ளன. ரயிலில் தேநீர் விற்று பிழைப்பு நடத்திய இளைஞரான மோடியே இன்று இந்தியப் பிரதமர். ரயிலில் டோஃபி மற்றும் சிகரெட் விற்றுத்தான் பிழைப்பு நடத்தினார் என்று அனுர ஒருமுறை கூறியிருந்தார். மோடியின் தாய் ஒரு எளிய கிராமத்துப் பெண். அனுராவின் தாயும் ஒரு எளிய கிராமத்துப் பெண். தன்னைப் போன்ற ஒரு தலைவரை மோடி சந்தித்திருப்பாராக இருந்தால் அது நிச்சயம் அநுரவாகத்தான் இருப்பார்.

அநுரா தன்னைப் போன்ற ஒரு தலைவரை சந்தித்தார் என்று இருந்தால் அதுவும் மோடியாகத்தான் இருக்கும். இவ்விருவருக்குமிடையிலான இந்த ஒற்றுமை இந்திய-இலங்கை உறவை எவ்வாறு பாதிக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# 2025 செப்ரெம்பருக்குள் ஆதாரங்களை திரட்டும் செயன்முறை சாத்தியமில்லை

## ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி கூறுகிறார்

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு ஆணை அளிக்கப்பட்டிருக்கும் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையை முழுமையாகப் பூர்த்திசெய்வது சாத்தியமற்றது என சுமந்திரனிடம் சுட்டிக்காட்டியிருக்கும்இலங்கைக்கான ஐ.நா வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரெஞ்ன்ஞ், எனவே அவசியமேற்படின் இலங்கை குறித்த தீர்மானத்தை மேலும் காலநீடிப்பு செய்வது பற்றி இணையனுசரணை நாடுகளுடன் பேச்சுகளை நடத்தவேண்டியிருக்கும் எனத் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரெஞ்சுக்கும், இலங்கைத்தமிழரசுக்கட்சி உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அண்மையில் ஆட்சிபீடமேறியிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் மற்றும் தற்போது அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள்பற்றிஐ.நா. வதிவிடப்பிரதிநிதி தமிழரசுக்கட்சி உறுப்பினர்களிடம் கேட்டறிந்தார்.

குறிப்பாக ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கையகப்படுத்தப்பட்டிருக்கும் காணிகளை விடுவிப்பதற்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள், இன்னமும் உரிமையாளர்களிடம்மீளக்கையளிக்கப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பானவிவரங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தின்மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரைப் பிரச்சினை, புலனாய்வாளர்களின் கண்காணிப்பு என்பனபற்றி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் விசேடமாகக் கேட்டறிந்துகொண்டார்.

அதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டம் 'முற்றாக நீக்கப்படும்' என தேர்தல் பிரசாரங்களின்போது வாக்குறுதியளித்திருந்த தேசிய மக்கள் சக்தி, தற்போது அதிலிருந்து பின்வாங்கி, பயங்கரவாதத்தடைச்சட்டத்தைத் 'திருத்தியமைப்பதாகக்' கூறிவருவதாக ஐ.நா. வதிவிடப்பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டிய தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள், இதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்தனர்.

அதுமாத்திரமன்றி அண்மையில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு (10 ஆம் திகதி) சர்வஜன நீதி அமைப்பால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், உடனடியாக அவதானம் செலுத்தப்படவேண்டும் எனத் தம்மால் வலியுறுத்தப்பட்ட மனித உரிமைகள்சார் கரிசனைகள் பற்றியும் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சிடம் எடுத்துரைத்தனர்.

அதேபோன்று கடந்த செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேலும் ஒருவருடகாலத்துக்கு நீடிக்கப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வரவிருக்கிறது.

அத்தீர்மானத்தின் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு அளிக்கப்பட்ட ஆணையின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டுவரும் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையின் (இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம் எனும் பெயரால் அழைக்கப்படுகிறது) தற்போதையநிலைவரம்மற்றும்அதனை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் முழுமையாக நிறைவுசெய்வதற்கான சாத்தியப்பாடு என்பன பற்றி ஐ.நா வதிவிடப்பிரதிநிதியிடம் சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த ஐ.நா வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ், ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையை செப்ரெம்பர் மாதத்துக்குள் நிறைவுசெய்வது சாத்தியமில்லை என்றும், அவ்வாறு முடிவுறுத்தமுடியாவிடின் இலங்கை தொடர்பான தீர்மானத்தை மேலும் காலநீடிப்பு செய்வது குறித்து இணையனுசரணை நாடுகளுடன் கலந்துரையாடவேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி ஆரம்பத்தில் இணையனுசரணை நாடுகளுக்குத் தலைமைதாங்கிய அமெரிக்காவிலும், தற்போது தலைமைத்துவத்தை வழங்கிவரும் பிரிட்டனிலும் அண்மையில் ஆட்சிமாற்றம் இடம்பெற்றிருக்கும் நிலையில், அந்நாடுகளின் பிரதிநிதிகளுடன் இதுபற்றிய பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும் எனவும் மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் இதன்போது வலியுறுத்தினார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# முஸ்லிம் காங்கிரஸ் நிறுவுனரான அஷ்ரப்புக்கு துஆப் பிரார்த்தனை

(ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் ஜாவத்தையில் அமைந்துள்ள அடக்கஸ்தலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உச்சபீட உறுப்பினரும் மஜ்லீஸ் சூறாவின் தலைவருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம்.கலீல் மௌலவி அவர்களின் துஆப் பிரார்த்தனை நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை 06.00 மணிக்கு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்ட முதுமாணி அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.ஹிஸ்புல்லாஹ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ் உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எஸ்.நளீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உச்சபீட உறுப்பினர்களான ரவூப் ஹசீர், ஏ.சீ.சமால்டீன் (அம்பாறை மாவட்ட செயலாளர்), ஏ.நசீர் (குபால் அதிபர் ஏறாவூர்), கல்முனை மாநகர சபையின் வேட்பாளர் எம் எம்.எம்.பாமி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.





# வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கிழக்கு ஆளுனரை சந்தித்தனர்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் கிழக்கு மாகாண வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன், கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இங்கு தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், அவற்றுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

# யாழ்ப்பாணத்தில் நான்காம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

நான்காம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (புதன்கிழமை) காலை 9 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த கால கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், அடுத்த காலாண்டுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்வதே இக் கூட்டத்தின் நோக்கமாகும் எனவும், சரியான முறையில் கணக்காய்வு விடயங்களை முகாமை செய்யும்போது ஐய வினாக்களைத் தவிர்க்கலாம் எனவும், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் நடைமுறை ரீதியில் சமூக நலன் கருதி அபிவிருத்தித்திட்டங்களுக்காக சில முடிவுகளை தற்துணிவுடன் எடுப்பதால் சில இடர்ப்பாடுகளை எதிர் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தேசிய கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் சுனில் ஜெயசேகர நிகழ்நிலை தொழில்நுட்பம் ஊடாகக் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் கணக்காய்வாளர் அத்தியட்சகர்கள், பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக கணக்காளர்கள், துறைசார் கிளைத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.






# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தேவைப்பாடு, மேம்பாடுகள் கலந்தாய்வு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தேவைப்பாடுகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் அ.சாந்தசீலன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரண, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி கோ.ரஜீவ் ஆகியோருடன், நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோரால் ஏற்படும் வாகன நெரிசலை தவிர்க்க அறிவுறுத்து

## மாவட்ட செயலர் கலந்துரையாடலில் கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதால் அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடலொன்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதன்போது, மாவட்டச் செயலகத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, தரம் 9 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி நிலைய மற்றும் குழு வகுப்பு செயற்பாடுகளை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகவும், அறநெறிசார் செயற்பாடுகளுக்காகவும், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்துவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தீர்மானம் மாவட்டத்தின் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டதாகவும். பிள்ளைகளின் நலன் கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் அமைவிடங்கள், வகுப்பறைக் கட்டமைப்பு மற்றும் வசதிகள் தொடர்பிலும் நிறுவன உரிமையாளர்கள் கூடுதலான கவனம் செலுத்துமாறும் மாவட்ட செயலர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், தனியார் கல்வி நிலையவாசலில் பெற்றோர்கள் காத்திருப்பதால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.

ஆகவே தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் ஃ நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையை மேற்கொண்டு போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த பொறிமுறையைத் தாமாக நடைமுறைப்படுத்த தவறும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் பொலிஸாரின் உதவிபெற்றுக்கொள்ளப்படும்.

மேலும் பிரதேச செயலாளர்கள் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புக்கள் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.










காலைக்கதிர்
Kalaikkathir

## அருச்சுனா....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் விசேட கூற்றை முன்வைக்க சபாநாயகர் அனுமதியளித்தார்.

முதலில் யாழ். வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் தெளிவாகப் பேசிய அர்ச்சுனா பின்னர், தடம் மாறி நிலையியற் கட்டளைகளுக்கும் சபை நடவடிக்கைகளுக்கு முரணாகவும் பேசத் தொடங்கினார். அப்போது சில தடவைகள் குறுக்கிட்ட சபாநாயகர், விசேட கூற்று தொடர்பான ஆவணத்தில் என்ன இருக்கின்றதோ அதை மட்டும் பேசுமாறு வலியுறுத்தினார். ஆனால் அருச்சுனா அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் கடுமையாகச் சாடினார். சபாநாயகர் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் எதிர்க்கட்சியினரும் அரச தரப்பினரும் அருச்சுனாவுடன் முரண்படத் தொடங்கினர். அதைப் பொருட்படுத்தாமல் நாடாளுமன்ற உறுப்பினர் தனது கடும் விமர்சனங்களைத் தொடர்ந்தார். அப்போது எழுந்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்னாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா யாழ். வைத்தியசாலை தொடர்பில் விசேட கூற்றை முன்வைக்கின்றார். அப்படிச் செய்வதற்கு முன்னர் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சருக்கு அதுபற்றி அறிவிக்கவேண்டும். ஆனால், இந்தக் கூற்றுத் தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு அறிவிக்கப்படவில்லை. ஆகையால், இவர் விசேட கூற்றை முன்வைக்க நாடாளுமன்ற செயலாளர் எவ்வாறு அனுமதித்தார் எனக் கேட்கின்றேன் என்றார். அத்துடன், விடய தானத்துக்கு முரணாக அவர் பேசும் விடயங்கள் தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இவ்வாறு சபை முதல்வர் கூறிக்கொண்டிருந்தபோதும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பேசுவதை நிறுத்தவில்லை. இந்நிலையில் நிலையியற் கட்டளைகளுக்கு முறையான அவரது கருத்துக்களை ஹன்சாட் பதிவிலிருந்து நீக்குமாறு சபாநாயகர் அறிவித்தார்.

## பி.சி.ஆர்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

2019 முதல் 2022 வரை இலங்கையில் கொவிட் 19 தொற்றுப் பரிசோதனைகளின்போது, அன்டிஜன் பரிசோதனை அரச துறைகளின் மூலம் 21 இலட்சத்து 97 ஆயிரத்து 318 பரிசோதனைகளும் தனியார் துறைகளின் மூலம் 6 இலட்சத்து 18 ஆயிரத்து 538 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பீ.சீஆர். அரச துறைகளின் மூலம் 40 இலட்சத்து 41 ஆயிரத்து 124 பரிசோதனைகளும் தனியார் துறை மூலம் 26 இலட்சத்து 41 ஆயிரத்து 326 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்டிஜன் மற்றும் பீசீஆர். தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு 26 நிறுவனங்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அதில் 7 நிறுவனங்களில் இருந்தே அன்டிஜன் மற்றும் பீசீஆர். தொகுதிகளை ஆப்போதைய ஆளும்தரப்பு கொள்வனவு செய்திருக்கிறது. அதில் 2,2 பில்லியன் ரூபாய்க்கு அதிக அன்டிஜன் தொகுதிகளைக் கொள்வனவு செய்துள்ள கொழும்பு நிறுவனம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்படாத நிறுவனமாகும்.

அதேபோன்று உலகசந்தைவிலையைவிட அதிக விலைக்கு தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும். விசாரணையின் பின்னர் மோசடிகாரர்கள் தொடர்பில் இந்தச் சபைக்கு வெளிப்படுத்துவேன் - என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் விஜித ஹேரத், ''நாங்கள் ஒரு புதிய ஆளும்தரப்பாக, சீனாவுடனும், இந்தியாவுடனும், அமெரிக்கா, ரஷ்யா, கியூபா மற்றும் வட கொரியா போன்ற பிற நாடுகளுடனும் நல்லுறவைக்கொண்டிருக்கவே விரும்புகின்றோம். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்” என்று தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத்தினை மேற்கோள்காட்டி 'திஹிந்து' வெளியிடப்பட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்தியாவிற்கான முதல் பயணத்திற்குப் பிறகு, அவர் அடுத்த பயணமாக அடுத்த மாதம் சீனாவுக்குச் செல்கிறார். திசாநாயக்க இந்தியா வருவதை முன்னுரிமைப்படுத்தியிருந்தாலும், எமது ஆளும்தரப்பு டில்லி மற்றும் பீஜிங் ஆகிய இரு நாடுகளிடமிருந்தும் தொடர்ச்சியான ஆதரவினை எதிர்பார்கின்றது.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற செய்த இலங்கைக்கான சீனத் தூதர் கீ சென்கொங், இலங்கைக்கு அருகில் உள்ள அண்டை நாடு என்பதால் திசாநாயக்கவின் இந்தியப் பயணத்தை சீனா வரவேற்கிறது என்று தெரிவித்திருந்தார். திசநாயக்கவின் பீஜிங் பயணம் 'சீனா - இலங்கை'யின் பாரம்பரிய நட்பை மேம்படுத்தும், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் என்பதோடு அது எமது மக்களுக்கு அதிக நன்மைகளை வழங்குவதாகவும் இருக்கும் - என்றார்.

## கட்டுப்பாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. கட்டுப்பாட்டு விலை 230 ருபாயாக இருந்தும் நாட்டு அரிசி 250 ரூபாய்க்கே விற்கப்படுகிறது. கீரி சம்பா 260 என்று கூறப்படுகிறது. கடைகளில் அதன் விலை 280. சிவப்பு நாடு 220 என்று கூறப்படுகிறது, ஆனால் சந்தையில் இது 250 ரூபாய் ஆகும்.

அதாவது ஒரு பக்கம் கட்டுப்பாட்டு விலையை விதித்தாலும் இந்நாட்டில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் அவர்கள் விரும்பிய விலைக்கே அரிசியை விற்பனை செய்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த, நாட்டுக்கு அரிசி கொண்டு வருவது நல்ல முடிவு. ஆனால் ஆட்சிக்கு வந்ததும் அரிசியை இறக்குமதி செய்யமாட்டோம் என்றார்கள். இப்போது அரிசி விலையைக்கூட கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றார்கள்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிவகுத்தன.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நீதி அமைச்சர் ஹர்சன தெரிவித்த, அஜித் பி. பெரேரா 'உயர் சட்டத்தரணி' என்ற பதத்தைப் பயன்படுத்துவது தவறு என்ற கருத்தையொட்டியே நேற்றைய கருத்து மோதல் வெடித்தது.

''நான் இல்லாத சந்தர்ப்பத்தில் நீதியமைச்சர் எனது கல்வித்தகைமை பற்றிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். 2023 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நான் ஆலோசனை சட்டத்தரணியாக செயற்படுகிறேன். கவுன்சில் சட்டத்தரணியாக நான் சேவையாற்றுகிறேன். அதன் அடிப்படையில் உயர் சட்டத்தரணி என்று குறிப்பிட முடியும்” என்றார்.

பதிலளித்த நீதியமைச்சர், ''ஹர்ஷன நாணயக்கார, அஜித் பி, பெரேரா உயர் சட்டத்தரணி என்ற பட்டத்தை எங்கு பெற்றார்? அவ்வாறு பெற்ற பட்டத்தை சபைக்குச் சமர்ப்பிக்குமாறு மாத்திரமே வலியுறுத்தினேன்” என்றார்.

மீண்டும் உரையாற்றிய அஜித் பி. பெரேரா ''நான் தெளிவாகக் குறிப்பிட்டேன், நான் கவுன்சில் சட்டத்தரணி என்று. இவருக்கு சிங்களம் தெரியாதா?” என்றார். ''நீதியமைச்சர்கூட 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தான் உயர் சட்டத்தரணி ஆகவே தனக்கு வாக்களியுங்கள் என்றே பரப்புரை செய்துள்ளார்” என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய நீதியமைச்சர், ''நான் பொய்யுரைக்கவில்லை. இவருக்குப் பதிலளித்து அவரை பெருமைப்படுத்த விரும்பவில்லை” என்றார்.

ஆனாலும் விடமறுத்த அஜித். பி. பெரேரா, ''இங்கிலாந்து கல்விப் புலமையை இங்கு பயன்படுத்த முடியாது என்று குறிப்பிடுவதையிட்டு நீதியமைச்சர் வெட்கப்படவேண்டும். பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டத்தைப் பயன்படுத்திவிட்டு பின்னர் அச்சமடைந்து உண்மை வெளிப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்துக்கு அறிவித்து கலாநிதிப் பட்டத்தை நீக்கிவிட்டு வெட்கமில்லாமல் பேசுகிறார்” என்று கடுமையாகச் சாடினார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் மற்றும் எதிர்தரப்பினருக்கு இடையில் கடும் தர்க்கம் நிலவியது. அனைவரும் உரையாற்றுவதற்கு அனுமதி கோரியபோது சபைக்கு தலைமை தாங்கிய பிரதிக் குழுக்களின் தலைவர் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகலவுக்கு மட்டும் வாய்ப்பு வழங்கப்பட்டது. ''25 ஆண்டுகாலம் சட்டத்தரணியாக சேவையாற்றியுள்ளேன். இலங்கையின் நீதி கட்டமைப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மற்றும் சட்டத்தரணி என்று இருவேறு பிரிவுகள் மாத்திரமே உள்ளன. எதிர்க்கட்சியின் உறுப்பினர் அஜித் பி. பெரேரா குறிப்பிடுவதை போன்று 'உயர் சட்டத்தரணி' என்ற பதவி கிடையாது” என்றார்.

இதற்குப் பதிலளித்த எதிர்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார ''முன்னாள் சபாநாயகர் அசோக்க ரன்வல எதிர்க்கட்சியின் உறுப்பினர் என்று நினைத்துக் கொண்டு ஆளும் தரப்பினர் பேசுகிறார்கள் போலுள்ளது. அமைச்சரவை உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் பலவும்கூட சந்தேகத்துக்கிடமானவையாக உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் கல்வித் தகைமையை பகிரங்கப்படுத்தியதை போன்று அமைச்சர்களின் கல்வித் தகைமைகளையும் முடிந்தால் பகிரங்கப்படுத்துங்கள்” என்று சவால் விடுத்தார்.

## வட்டுவாகல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில், முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்படும் என்றார் அமைச்சர்.

முல்லைத்தீவு நகரத்தை ஏனைய பெருநிலப்பரப்புடன் இணைக்கும் வட்டுவாகல் பாலம் மிக ஒடுக்கமானதாக உள்ளது. வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதற்கு ஆபத்தானதாக இருக்கின்றது. மழை காலங்களில் பாலத்திற்கு மேலாக அதிக வெள்ளம் பாய்ந்தோடுவதால் போக்குவரத்து தடை ஏற்படுகின்றது.

இந்த இடத்தில் புதிதாக ஒரு பாலம் அமைக்கப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அண்மைக் காலமாகத் தொடர்ந்து வலியுறுத்து வருகின்றார்.

## கல்விச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சவால் விட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'கென்ரிசர்ட் கொன்வன்ட்'டில் நான் முன்பள்ளி படித்தேன். பின்னர் 'ஷான் தோமஸ்' ஆரம்ப வித்தியாலயத்துக்குச் சென்றேன். அதன் பின்னர் 'ரோயல்' கல்லூரிக்குச் சென்றேன். இந்த நாட்டில் நான் சாதாரண தர பரீட்சைக்கு முகம்கொடுக்கவில்லை. 'ரோயல்' கல்லூரியில் சிரேஷ்ட மாணவர் தலைவராகச் சிறிது காலம் செயற்பட்டேன்.

அதன் பின்னர் இங்கிலாந்தில் 'மில்ஹில்' த்தியாலயத்தில் கல்வி கற்றேன். அங்கு சாதாரண பரீட்சைக்கு முகம்கொடுத்து சித்தியடைந்தேன்.

அதாவது நான் லண்டல் கல்வி பொதுத் தராத சாதாரண பரீட்சையே எழுதினேன். அதேபோன்று 'மில்ஹில்' வித்தியாலயத்தில் உயர்தர பரீட்சையில் தோற்றி 2பீ, 2சீ பெறுபேறு பெற்றேன். அந்தப் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு இங்கிலாந்தில் பட்டப்படிப்பை கற்றேன்.

அதன் பின்னர் அமெரிக்காவில் முதுமாணி பட்டத்தை தொடர்வதற்கு தெரிவாகினேன். ஆனால் எனது தந்தையின் மறைவுக்கு பின்னர் நாட்டுக்கு வர தீர்மானித்தேன். அதனால் முதுமாணி பட்டப்படிப்பை தொடர முடியாமல் போனது. அமெரிக்காவில் முதுமாணி பட்டப்படிப்பை கற்றுகும்போது அங்குள்ள செனட்டை உறுப்பினரிடம் தொண்டராக சேவை செய்தேன்.

பின்னர் இலங்கைக்கு வந்து அரசியல் நடவடிக்கைகளை ஈடுபட்ட நிலையில் 2021, 2022 ஆம் கல்வி ஆண்டில் நான் திறந்த பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தேன், எனது முதுமாணி பட்டப்படிப்பை தொடர்வதற்காக.

அங்கு தற்போதைய பிரதமர் ஹரினி அமரசூரிய நடத்திய பலவேலைத்திட்டங்களில் நான் கலந்துகொண்டேன். பிரதமர் சிறந்த ஆசிரியை. என்றாலும் அரசியல் நடவடிக்கை காரணமாக கற்பித்தல் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் போனது. மேலும் யாராவது கேள்வி கேட்டால் காண்பிப்பதற்கு நான் எனது பிறப்புச் சான்றிதழையும் கொண்டுவந்தேன்.

எனது கல்வித் தகைமைகளுக்கு சவால் விடுத்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவும், நான் சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறவில்லை எனப் பல்வேறு தரப்பினரும் சமூக வலைதளங்கள் மூலம் மேற்கொண்டுவரும் பொய்ப் பரப்புரை மற்றும் எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் முகமாக முன்னெடுக்கப்படும் சேறுபூசும் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையிலும் எனது கல்விச்சான்றிதழ்களை சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தேன்.

ஆரம்பக் கல்வி முதல் திறந்த பல்கலைக்கழகத்தின் முதுமாணி கற்கை படித்தது வரையிலான அனைத்துக் கல்விச் சான்றிதழ்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன்.

நான் கல்வி கற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அனைத்து சான்றிதழ்களையும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்களாக எந்தவொரு குடிமகனாலும் பரீட்சித்துப் பார்க்கமுடியும்.

நான் போலியான கல்விச்சான்றிதழ்களைச் சமர்ப்பித்தது நிரூபிக்கப்பட்டால், எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளில் இருந்து விலகுவது போலவே அரசியலில் இருந்தும் விலகுவேன் - என்றேன்.



# வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் மாணவர்களுக்கு கற்றல் உதவி

(சபேசன்)

லண்டனில் வசிக்கும் கதிரமலை ராஜ்குமார் அவர்களது குடும்பத்தினரால்; வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் நாவிதன்வெளிக்கோட்டத்தினைச்சேர்ந்த வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு அதிபர் க.தியாகராஜா தலைமையில் செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

இவ் உதவியானது பாடசாலையின் அதிபர் க.தியாகராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்கவும் ஆசிரியர் வ.குலேந்திரன் மற்றும் வாமன் ஆகியோரின் முயற்சியினாலும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கதிரமலை ராஜ்குமார் மற்றும் அவரது புதல்வர் ரா.ரக்சனன் அதிபர் க.தியாகராஜா ஆசிரியர்களான வ.குலேந்திரன் வாமன், பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் கு.மதிவண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டு இவ் உதவியை வழங்கிவைத்தனர்.

அதேவளை இவர்களால் நாவிதன் வெளிக்கோட்டத்தில் உள்ள கணேஷாவித்தியாலய மாணவர்களுக்கும் இந்த உதவி வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

# தலை, கால்கள் அற்ற சிறுத்தை உடல் மீட்பு

(கிஷாந்தன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டப்பகுதியிலிருந்து சிறுத்தை ஒன்றின் உடலம் மீட்கப்பட்டுள்ளது.

18.12.2024 பிற்பகல் மீட்கப்பட்ட குறித்த சிறுத்தையின் உடலத்திலிருந்து தலை, நான்கு கால்கள் என்பன வெட்டி அகற்றப்பட்டுள்ளன என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சிறுத்தையின் சடலம் ஒன்று உயிரிழந்து கிடப்பதாக தோட்ட தொழிலாளர்களால் ஹற்றன் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் நல்லதண்ணி வனவிலங்கு அலுவலக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

சிறுத்தையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்ட போது, சிறுத்தையின் தலை மற்றும் நான்கு கால்கள் வேட்டையாடுபவர்களால் வெட்டப்பட்டிருந்ததாக ஹற்றன் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நல்லதண்ணி வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 10 வயதுடைய நன்கு வளர்ந்த சிறுத்தை கொல்லப்பட்டுள்ளதாகவும், சிறுத்தையின் சடலம் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.



# சைகை மொழியை அரச மொழியாக பிரகடனப்படுத்துமாறு வலியுறுத்து

இலங்கைதமிழ்செவிப்புலனற்றோர் அமைப்பின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு பேரணி கிளிநொச்சி வடமாகாண விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக இருந்து பசுமைப்பூங்கா வரை ஆரம்பித்து பசுமைப்பூங்கா வரை முன்னெடுக்கப்பட்டு பசுமைப்பூங்காவில் நிறைவடைந்ததும் ஆளுநருக்கான மகஜர் கையளித்தனர்.

குறித்த விழிப்புணர்வு பேரணியில் இலங்கை பூராகவும் உள்ள விழிப்புணர்வற்றோர் சங்கங்கள் பங்குபற்றின.தொடர்ந்து பசுமைப் பூங்காவில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக

திருமதி ஷிவானி சண்முகதாஸ் யாழ்ப்பாணம் சி.ஜி.ஈ.ஈ. பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 316

# பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா

(சியாஜ் )

கற்பிட்டி வன்னிமுந்தலில் கடந்த 26 வருடங்களாக சிறப்பாக நடைபெற்று வரும் மொஹமட் ஹனிபா பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா நிகழ்வுகள் இம்முறையும் சிறப்பாக செவ்வாய்க்கிழமை பாலர் பாடசாலையின் அதிபர் ஏ.சீ.ஐ சாதிக்கா தலைமையில் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.






இந் நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி நகரின் ஏனைய பாலர் பாடசாலை அதிபர்கள் மற்றும் வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் றொசான் மற்றும் லஹிரு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி மொஹமட் ஹனிபா பாலர் பாடசாலை 1999 ஆம் ஆண்டு ஆரம்பிங்கப்பட்ட போது பாலர் பாடசாலைக்கு என தனது சொந்த காணியை வழங்கி வைத்த முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் தலைவர் மர்ஹூம் எம் எச் மொஹமட் நினைவு கூறும் பாலர் பாடசாலையின் ஆரம்பம் முதல் இன்று வரை தனி ஒரு பெண்ணாக அதிபராக கடமை புரிந்து வரும் ஏ.சீ.ஐ சாதிக்கா இக் கலை நிகழ்ச்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய பாலர் பாடசாலையின் பெற்றோர்களுக்கும் தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# புத்தளம் அல்ஃபா மஹால் கட்டடத்தின் வேலைகளை துரிதப்படுத்த கோரிக்கை

(சியாஜ்)

புத்தளம் அல்ஃபா மஹால் கட்டட வேலைகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், பொருளாதார நெருக்கடியின் காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டு. பின்னர், 2017 ஆம் ஆண்டு முன்னாள் நகரபிதா கே.ஏ.பாயிஸ் தலைமையில் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, முடிவுறும்தறுவாயில் அவர்காலமானார்.

தொடர்ந்து நகரபிதாக பதவி வகித்த ரபீகினாலும் மேற்படி அல்ஃபா மஹால் கட்டிட வேலைகள் பூரணமாக நிறைவு பெறுவதற்கு முன்பே புத்தளம், நகர சபை கலைக்கப்பட்டதால் வெளியேறினார். அந்தப் பொறுப்புகள் நகரசபையின் செயலாளர் பிரதீபாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்று வரை மேற்படி அல்ஃபா மஹால் கட்டட வேலைகள் நிறைவு பெறாத நிலையில் தொடர்ந்து இழுத்தடிப்பு செய்யப்படுவதாக முற்பணம் செலுத்திய சுமார் 300 இற்கு மேற்பட்ட வர்த்தகர்கள் தமது அதிர்ப்தியை வெளியிட்டுள்ளதுடன் மேற்படி அல்ஃபா மஹால் கட்டடத்தின் வேலைகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்து தருமாறு புத்தளம் மாவட்ட தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பைசலிடம் கோரிக்கையையும் முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அறுதிப் பெரும்பானமை உண்டு என்ற செருக்கோடு செயற்பட்டால் கோட்டாபயவின் நிலையே ஏற்படும்

## ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றத்தில் காட்டம்



கல்விச் சான்றிதழ்களை பரீட்சித்துப் பார்க்கும் நாடாளுமன்றமாகச் செயற்படாமல், மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் சபையாகச் செயற்படவேண்டும்எனஅகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் கூறியதாவது -

எழுபது வருட அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கே, தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தனர். இதை விடுத்து, நாடாளுமன்றஉறுப்பினர்களின் கல்வித்தகைமைகளை பரீட்சித்தல், விவாதித்தல் செயற்பாடுகளே அண்மைக்காலமாக இந்த பத்தாவது நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்நிலைநீடித்தால்,அரசாங்கம் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடலாம். எனவே, ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுங்கள்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் இருக்கும் நல்ல பண்புகள், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இருக்க வேண்டும். 159 நாடாளுமன்ற உறுப்பினர்களைவைத்திருக்கும் செருக்குத்தனத்தில் செயற்பட்டால், கோட்டாபயவுக்கு ஏற்பட்ட இழி நிலையே ஏற்படும். 147 எம்.பிக்களுடன் ஆட்சிக்கு வந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் துரத்தியடிக்கப்பட்டது ஏன்? அகம்பாவம் மற்றும் ஆணவத்துடன் நடந்ததால், இன்று மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தெரிவாகுமளவுக்கு அவர்கள் இழிவுபடுத்தப்பட்டனர்.

கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் எண்ணிக்கையை அரசாங்கம் கூறியே ஆக வேண்டும். இது தொடர்பில், சுகாதார அமைச்சர் வழங்கிய பதிலில் எமக்குத் திருப்தி இல்லை. மக்களால் தெரிவானவர்கள் என்ற உரிமையுடனேயே இவ்விடயத்தைக் கோருகின்றோம். எமது மதத்தை நிந்தித்த கோட்டாவுக்கு இறைவன் வழங்கிய தண்டனையாகவே அவரது ஆட்சிக் கவிழ்ப்பை நோக்குகின்றோம்.

இதுவே எமது நம்பிக்கை. எல்லா மதங்களும் நல்லதையே போதிக்கின்றன. எனவே, சிறுபான்மைச் சமூகங்களை சிறுமைப்படுத்தும் இழி செயலைச் செய்ய வேண்டாம்.

அல் ஆலிம் பரீட்சையை தொடர்ந்தும் இழுத்தடிக்காமல் விரைவாக நடத்தி, சிறந்த மௌலவிமார்களை ஆசிரியர்களாக நியமியுங்கள்.

அஸ்வெசும சிறந்த திட்டம்தான். ஆனால், இவற்றை வழங்கும் முறைகள் ஒழுங்காக இல்லை. விதவைகள், ஏழைகள் மற்றும் ஊனமுற்றோருக்கு இந்தக் கொடுப்பனவுகள் சென்றடையவில்லை. சமுர்த்திஉத்தியோகத்தர்களைப்புறந்தள்ளி இப்பணிகள் முன்னெடுக்கப்படுவதாலே, இதில் குறைபாடுகள் நிலவுகின்றன.

சமூகங்களைப் புறந்தள்ளும் அல்லது ஒரு சமூகத்தை மாத்திரம் குறிவைக்கும் செயற்பாடுகளை எதிர்ப்பதற்கு ஒருபோதும் தயங்கமாட்டோம். மனோ கணேசன், முன்னாள் எம்.பி. சுமந்திரன் ஆகியோருடன் முன்னெடுத்த பணிகளை மீண்டும் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். - என்று குறிப்பிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2024இல் வெளியிடப்பெற்றது